**மனன வசனம்**

**நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். 1பேதுரு 2:9.**

**ஆராய்ச்சிக்கு**

**1பேதுரு 2:1-3;**

**எபிரெயர் 4:12;**

**1பேதுரு 2:4-8;**

**ஏசாயா 28:16;**

**யாத்திராகமம் 19:3-6;**

**1பேதுரு 2:5,9,10.**

ஏப்ரல் 8 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

# ராஜரீக ஆசரியக்கூட்டம்

யூதருடைய கலாச்சாரத்திலும் மதத்திலும் வரலாற்றிலும் ஊறிப்போயிருந்த பேதுரு, கிறிஸ்தவர்களுக்கு எழுதும் போது 'பரிசுத்த ஜாதி, தேவனுக்குச் சொந்தமானஜனம்' என்று அவர்களைக் குறிப்பிடுகிறார். முற்கால இஸ்ரவேலரைச் சுட்டிக்காட்ட பழைய ஏற்பாடு பயன்படுத் தும் உடன்படிக்கை பாணியை, இங்கு புதிய ஏற்பாட்டுச் சபைக்கு உரியதாக பேதுரு பேசுகிறார்.

எனவே, இயேசுவை ஏற்றுக்கொண்ட புறஜாதி விசுவாசிகளும் தேவனுடைய உடன்படிக்கை மக்களோடு சேர்க்கப்படுகிறார்கள். உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்களுக்கு இப்போது அவர்களும் சொந்தக்காரராகிறார்கள். ரோமர் 11:17,18 சொல்வதைப் பாருங்கள்: 'சில கிளைகள் முறித்துப்போடப்பட்டிருக்க, காட்டொலிவமரமாகிய நீ அவைகள் இருந்த இடத்தில் ஒட்ட வைக்கப்பட்டு, ஒலிவமரத்தின் வேருக்கும் சாரத்துக்கும் உடன்பங்காளியாயிருந்தாயானால், நீ அந்தக் கிளைகளுக்கு விரோதமாய்ப் பெருமைபாராட்டாதே; பெருமை பாராட்டுவாயானால், நீ வேரைச் சுமக்காமல், வேர் உன்னைச் சுமக்கிறதென்று நினைத்துக்கொள்.'

பவுல் சொல்கிறபடி, ஒலிவ மரத்தோடு ஒட்டவைக்கப்பட்டவர்கள் தேவனுடைய உடன்படிக்கையின் மக்கள் என்கிற உன்னத அழைப்பையும் பரிசுத்தமான பொறுப்பையும் பெற்றிருக்கிறார்கள். அதைத்தான் இந்த வார வசனத்தில் பேதுரு சுட்டிக்காட்டுகிறார். முற்கால இஸ்ரவேலர் பெற்றிருந்த ஒரு முக்கியக் கடமையும் அந்தப் பொறுப்புகளில் அடங்கும். அதாவது, ஆண்டவரில் அருளப்பட்டிருக்கும் இரட்சிப்புபற்றிய மிகப் பெரிய சத்தியத்தை அறிவிப்பதாகும்.

2017, ஏப்ரல்15 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

'இப்படியிருக்க' என்று 1பேதுரு 2:1 ஆரம்பிக்கிறது; இதற்குமுன் சொல்லப் பட்டதின் தொடர்ச்சி பின்னால் வருகிறது என்பதை அது சுட்டிக்காட்டுகிறது. 1பேதுரு 1ஆம் அதிகாரமானது, கிறிஸ்து நமக்காகச் செய்திருப்பதையும், அதற்கு மறுமொழியாக நாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் தெளிவாக எடுத்துச் சொல்கிறது. அடுத்த அதிகாரத்தில், இதே கருத்தை இன்னும் விலாவாரி யாக பேதுரு பேசுகிறார்.

***நாம் எப்படிப்பட்டவர்களாக வாழவேண்டுமென்று 1பேதுரு 2:1-3ல் பேதுரு கூறுகிறார்?***

கிறிஸ்தவர்களுக்குள்ள கடமைகளாக இரண்டு கருத்துகளை பேதுரு காட்டு கிறார். அதில் ஒன்று எதிர்மறையானது; அதை அவர்கள் அகற்றவேண்டும். அடுத்தது நேர்மறையானது; அதைச் அவர்கள் செய்ய வேண்டும்.

முதல் கருத்தில், துர்க்குணத்தையும், கபடத்தையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிடுமாறு கிறிஸ்தவர் களை பேதுரு வலியுறுத்துகிறார். 1பேதுரு 2:1. ஒழித்துவிட்டால், தங்களைச் சுற் றிலுமுள்ள மக்களைக் காட்டிலும் கிறிஸ்தவர்கள் முற்றிலும் வித்தியாசமானவர் களாக நடந்துகொள்ள முடியும். துர்க்குணத்தை ஒழிக்கும்போது, மற்றவர்களைப் புண்படுத்துகிற ஆசை வராது; மாறாக, அவர்களுடைய நலனை நாடுவார்கள். கிறிஸ்தவர்கள் நேர்மையற்ற நடத்தையை தங்களிடமிருந்து அகற்றியிருப்பதால், மற்றவர்களை வஞ்சிக்கமாட்டார்கள்; நீதியாகவும் நேர்மையாகவும் நடப்பார்கள். கிறிஸ்தவர்கள் தங்களைக் காட்டிலும் அதிகம் வைத்திருப்பவர்கள்மேல் பொறாமை கொள்ள மாட்டார்கள். தங்களுக்கு இருப்பதில் மனதிருப்தியடைந்து, தேவன் தங்களை வைத்திருக்கும் இடத்தில் செழிப்பார்கள். மற்றவர்களின் நன்மதிப்பைக் கெடுக்கும்படி துணிகரமாக எந்தப் பேச்சையும் பேசமாட்டார்கள்.

புதிதாய்ப் பிறந்த குழந்தை பாலின்மேல் வாஞ்சையாயிருப்பதை இரண்டா வது கருத்தாக பேதுரு கூறுகிறார்; கிறிஸ்தவர்கள் செய்யவேண்டிய நன்மையான ஒன்றை அதன்மூலம் தெரியப்படுத்துகிறார். கிறிஸ்தவ வாழ்க்கை என்பது வெறுமனே கெட்ட காரியங்களை விட்டுவிடுவது மாத்திரமல்ல. அது வெறுமை யான ஒரு வாழ்க்கையாக இருக்கும். பசியுள்ள குழந்தை பாலுக்காக அழுவது போல, ஆவிக்குரிய ஊட்டத்திற்காக ஏங்குவதாக நம் வாழ்க்கை இருக்க வேண் டும். அந்த ஆவிக்குரிய ஊட்டத்தைத் தருகிற ஆதாரம் வேதாகமம் என்றும் அவர் சுட்டிக்காட்டுகிறார். எபி 4:12; மத் 22:29; 2தீமோ 3:15-17. தேவ வார்த்தைமூலம்தான் நாம் ஆவிக்குரிய ரீதியாகவும், ஒழுக்க ரீதியாக வும் வளரமுடியும்; ஏனென்றால், அதில்தான் இயேசு கிறிஸ்துவைப்பற்றிய ஒரு முழு வெளிப்பாடு நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. நாம் அன்புகூர்ந்து, சேவிக்கவேண்டிய பரிசுத்த தேவ னுடைய குணத்தையும் தன்மையையும் இயேசுவே முழுவதுமாக நமக்கு வெளிப் படுத்துகிறார்.

தேவ வார்த்தையிலிருந்து ஆவிக்குரிய ஊட்டத்தைப் பெற்றுக்கொள்ள நாம் முயலவேண் டும். பேதுரு எச்சரிக்கும் மோசமான செயல்களில் இருந்தும், மனநிலைகளில் இருந்தும் நாம் விலகவேண்டும். இவை இரண்டும் எவ்வாறு தொடர்புடையவை?

***1பேதுரு 2:4-8இல் பேதுரு சுட்டிக்காட்டும் முக்கியச் சத்தியம் என்ன? ஏசா 28:16; சங் 118:22; ஏசா 8:14,15. நாம் எவ்வாறு இயேசுவுக்கு இணங்கிநடக்கவேண்டும் என்கிறார்?***

ஆவிக்குரிய ஊட்டத்தைப் பெற முயலும்படி தன் வாசகர்களுக்குச் சொல்லி வந்தார் பேதுரு; இப்போது, எருசலேம் தேவாலயத்தை உருவகமாக வைத்து, ஜீவனுள்ள கல்லாகிய இயேசுகிறிஸ்துவிடம் அவர்களது கவனத்தைத் திருப்பு கிறார். மூலைக்கல்லின் முக்கியத்துவத்தை உரைக்கும் மூன்று பழைய ஏற்பாட்டு வேதப்பகுதிகளை 1பேதுரு 2:4-8ல் பேதுரு குறிப்பிடுகிறார்; இயேசு தம் சபையில் ஆற்றுகிற பங்கை அவ்வசனங்கள் வலியுறுத்துகின்றன. இந்த வசனங்களை இயேசுவுக்கு ஒப்பிட்டுப்பேசியது பேதுரு மாத்திரமல்ல. தம்முடைய உவமை களின் ஒன்றின் முடிவில் இயேசுதாமே சங் 118:22ஐச் சுட்டிக் காட்டியிருக்கிறார். மத் 21:42. யூதத்தலைவர்களிடம் பேசியபோது பேதுருவும் அதைச் சுட்டிக் காட்டி னார். அப் 4:11. பவுலும் ஏசா 28:16ஐ ரோமர் 9:33ல் சுட்டிக்காட்டுகிறார்.

இயேசு புறக்கணிக்கப்பட்டார்; சிலுவையில் அறையப்பட்டார்; ஆனாலும், தேவனுடைய ஆவிக்குரிய வீட்டின் மூலைக்கல்லாக தேவன் அவரைத் தெரிந்து கொண்டார்; அதைத்தான் பேதுரு இங்கு வலியுறுத்துகிறார். எனவே, கிறிஸ்தவர் களும் அந்த ஆவிக்குரிய வீட்டில் கட்டப்பட்டு வரும் ஜீவனுள்ள கற்களாக இருக் கிறார்கள். மூலைக்கல், கட்டுமானக் கற்கள் போன்ற வார்த்தைகளைப் பயன்படுத் துவதால் ஒரு சபையை உருவகமாக வைத்தே பேதுரு பேசுகிறார். சபை இயேசுவில் அஸ்திபாரமிடப்பட்டு, அவரைப் பின்பற்றுகிறவர்களால் கட்டப்பட்டு எழும்புகிறது.

ஒரு கிறிஸ்தவ சமுதாயத்தில் அல்லது ஒரு உள்ளூர்ச் சபையில் அங்கத்தின ராகும்போதுதான் ஒரு கிறிஸ்தவராகிறோம். ஒவ்வொரு செங்கலாக வைத்து ஒரு பெரிய கட்டிடத்தைக் கட்டுகிறோம்; எனவே, மற்றவர்களைவிட்டுப் பிரிந்து, தனித்தனியே இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப் படமுடியாது. தேவனுடைய ராஜ்யத்தின் வளர்ச்சிக்காக பிற கிறிஸ்தவர்களோடு சேர்ந்து ஆராதனைசெய்யாத, ஊழியம்செய்யாத ஒரு கிறிஸ்தவர் மாறுபாடான கருத்துள்ளவராக இருக்கிறார். கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள்; கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றிருப்பதால், அவரு டைய சபைக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள்.

சபையின் செயல்பாடுகள்பற்றியும் பேதுரு சொல்கிறார். ‘ஆவிக்கேற்ற பலி களைச் செலுத்தும் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவேண்டும்.’1பேதுரு 2:5. ஆசாரி யர்கள், தேவனுக்கும் அவருடைய மக்களுக்கும் இடையே மத்தியஸ்த ஊழியத் தைச் செய்தார்கள். சபையை தேவனுடைய ஜீவனுள்ள ஆலயமாகவும், அவ ருடைய மக்களை அதன் ஆசாரியர்களாகவும் காட்டுவதற்கு தேவாலயத்தோடும் ஆசாரியத்துவத்தோடும் சம்பந்தப்பட்ட வார்த்தைகளைத்தான் பேதுருவும் புதிய ஏற்பாட்டின் பிற எழுத்தாளர்களும் பயன்படுத்துகிறார்கள். இன்று கிறிஸ்தவர்கள் எவ்வாறு வாழவேண்டும், செயல்படவேண்டும் போன்ற சத்தியங்களை வெளிப் படுத்த பழைய ஏற்பாட்டு தொழுகைமுறையை அவர் சுட்டிக்காட்டுகிறார்.

‘ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்துவது’ என்றால் என்ன? 1பேதுரு 2:5. ஒரு சபையாக ஆராதனைசெய்கிற கிறிஸ்தவர்கள் எவ்வாறு அதைச் செய்யமுடியும்?

## தேவனுடைய உடன்படிக்கை மக்கள்

பழைய ஏற்பாட்டு கண்ணோட்டத்திலேயே பவுல் அதிகமாக எழுதுகிறார். உடன்படிக்கை அதில் மையமான ஒன்று. உடன்படிக்கையானது யூதர்களின், கிறிஸ்தவர்களின் இறையியல் கருத்துகளிலும் மையமான ஒன்று.

உடன்படிக்கை என்றால் என்ன?

உடன்படிக்கை என்பதற்கான எபிரெய வார்த்தை பெரிட். இரு சாராருக்கு இடையே செய்யப்படும் ஓர் ஒப்பந்தத்தை அது சுட்டிக்காட்டுகிறது. இரு தனி நபர்களுக்கு இடையேயான ஒப்பந்தமாக இருக்கலாம். உதாரணமாக, லாபான் மற்றும் யாக்கோபு. ஆதி 31:44. அல்லது, இரு ராஜாக்களுக்கு இடையேயானதாக இருக்கலாம். உதாரணமாக, சாலமோன் மற்றும் ஈராம். 1இராஜா 5:12. ஒரு ராஜாவுக்கும் அவனது மக்களுக்கும் இடையேயானதாகவும் இருக்கலாம். உதாரணமாக, தாவீதும் இஸ்ரவேலின் மூப்பர்களும் பண்ணிக்கொண்டது. 2சாமு 5:3.

இவற்றிலெல்லாம் விசேஷமானது, தேவனுக்கும் அவர் தெரிந்துகொண்ட மக்களான ஆபிரகாமின் சந்ததியாருக்கும் இடையேயான உடன்படிக்கை உறவு.

***இஸ்ரவேலரோடு தேவன் செய்துகொண்ட உடன்படிக்கைபற்றி இவ்வசனங்கள் என்ன சொல்லுகின்றன? ஆதி 17:1-4; யாத் 2:24: யாத் 24:3-8.***

---

ஆபிரகாமோடு தேவன் செய்த உடன்படிக்கையைப்பற்றி வேதாகமத்தின் முதல் புத்தகமான ஆதியாகமம் கூறுகிறது. ஆதி 15:9-21; 17:1-26. தேவன் தம் ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தபோது இந்த உடன்படிக்கையை 'நினைவுகூர்ந்தார்.' யாத் 2:24. மோசேயின் காலத்தில், இஸ்ரவேல் புத்திரருக்கு பத்துக்கற்பனைகளையும் மற்ற பிரமாணங்களையும் கொடுத்தபோதும் இந்த உடன்படிக்கையைப் புதுப்பித்தார். யாத் 19:1-24:8; குறிப்பாக, யாத் 24:3-8.

ஆனால் நிபந்தனையின்பேரிலேயே உடன்படிக்கையின் வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டிருந்தன. 'தம்முடைய கட்டளைகளைக் கைக்கொள்வதில் அவர்கள் உண்மையோடிருந்தால், அவர்களுடைய சகல கைகளின் கிரியைகளையும் விளைச்சலையும் தாம் ஆசீர்வதிப்பதாக தேவன் உடன்படிக்கை செய்திருந்தார்.' - *EGW, 2T, p 574.* தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாததால் உண்டாகக்கூடிய ஆபத்துகளை உடன்படிக்கையை நினைவுப்படுத்தி, இஸ்ரவேலரை மீண்டும் மீண்டும் தீர்க்கதரிசிகள் எச்சரித்தார்கள். தானியேல் மற்றும் வெளிப்படுத்தலின் தீர்க்கதரிசனங்கள் போக மற்ற அனைத்து தீர்க்கதரிசனங்களுமே நிபந்தனையின் பேரில் கொடுக்கப்பட்டவை என்று சொல்லப்படுகின்றன. உடன்படிக்கை வாக்குறுதிகளில் கீழ்ப்படிதல் அவ்வளவு மையமான ஒன்று. ஆசீர்வாதங்களைக் குறித்த உடன்படிக்கையின் தீர்க்கதரிசனங்கள், தேவ கட்டளைக்குக் கீழ்ப்படிவதின் பேரில் கொடுக்கப்பட்டன; அழிவைக் குறித்த தீர்க்கதரிசனங்கள் கீழ்ப்படியாதவர்களுக்குமாத்திரமே கொடுக்கப்பட்டன.

தேவனோடு ஓர் உடன்படிக்கை உறவில் நீங்கள் நிலைத்திருக்கிறீர்களா? அந்த உடன்படிக்கை உறவானது உங்கள்மேல் என்னென்ன கடமைகளைச் சுமத்தியுள்ளது?

யாத் 19இல், மோசேயிடம் ஆண்டவர் இப்படியாகச் சொன்னார்: ''நீ யாக்கோபு வம்சத்தாருக்குச் சொல்லவும், இஸ்ரவேல் புத்திரருக்கு அறிவிக்கவும் வேண்டியது என்னவென்றால், நான் எகிப்தியருக்குச் செய்ததையும், நான் உங்களைக்கழுகுகளுடைய செட்டைகளின்மேல்சுமந்து, உங்களை என்னண்டையிலே சேர்த்துக்கொண்டதையும், நீங்கள் கண்டிருக்கிறீர்கள். இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டிய வார்த்தைகள் என்றார்.'' யாத் 19:3-6.

சிலுவைக்கு ஆயிரமாண்டுகளுக்கு முன்னரே வெளிப்பட்ட சுவிசேஷம் இது. அதாவது, தேவன் தம் மக்களை மீட்கிறார்; பாவத்திலிருந்தும் பாவ அடிமைத்தனத்திலிருந்தும் அவர்களை இரட்சிக்கிறார்; பிறகு, ஒரு விசேஷித்த உடன்படிக்கையின் மக்களாக தமக்குமுன்பாகவும் உலகத்திற்குமுன்பாகவும் வாழும்படி, தம்மில் அன்புகூர்ந்து கீழ்ப்படிய அழைக்கிறார்.

***'ராஜரீகமான ஆசாரியக்கூட்டம்', 'ஒரு பரிசுத்த ஜாதி' என்று கிறிஸ்தவர்களை பேதுரு அழைப்பதின் அர்த்தம் என்ன? 1பேதுரு 2:5,9,10; யாத் 19:6. இதிலிருந்து செவந்த் டே அட்வென்ட்டிஸ்ட் கிறிஸ்தவர்கள் தங்கள் கடமைகள்பற்றி என்ன அறிந்துகொள்ளலாம்?***

---

ஆபிரகாமின் சந்ததியாரோடு தேவன் வைத்திருந்த விசேஷித்த உறவைச் சுட்டிக்காட்டுவதற்கு ஆவிக்குரிய வீடு, தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததி, ராஜரீகமான ஆசாரியக்கூட்டம், தேவனுடைய சொந்த ஜனங்கள் போன்ற கனம்பொருந்திய வார்த்தைகளை வேதாகமம் பயன்படுத்துகிறது. இப்போது, புதிய ஏற்பாட்டின்பின்னணியில், இயேசுவையும்சிலுவையையும்வைத்து, உடன்படிக்கையோடு சம்பந்தப்பட்ட இதே வார்த்தைகளை சபையின் அங்கத்தினர்களோடு சம்பந்தப்படுத்தி பேதுரு பேசுகிறார். இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட உடன்படிக்கையின் வாக்குறுதிகள் இயேசுவை விசுவாசிக்கும் யூதர்களுக்கு மாத்திரமல்ல, புறஜாதி விசுவாசிகளுக்கும் இப்போது சொந்தமாகியிருக்கின்றன. ஆம், இயேசுவின் மூலம் புறஜாதியாரும்கூட ஆபிரகாமின் புத்திரராகும் உரிமையைச் சொந்தமாக்கிக்கொள்ளலாம். 'நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்.' கலா 3:29. மனிதனாகப் பிறந்த எவரும் கிறிஸ்துவின்மூலம் இந்த 'ராஜரீகமான ஆசாரியக்கூட்டத்தில்' ஒருவராகலாம்.

---

ஒரு பரிசுத்த ஜாதியா? ஒரு ராஜரீகமான ஆசாரியக்கூட்டமா? இந்தக் கூட்டத்தில் நாமும் ஒருவராக இருக்க விரும்பினால், ஒரு சபையாக அல்லது தனிநபராக நாம் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழவேண்டும்? இந்த உன்னத அழைப்புக்கு தகுதியுள்ளவர்களாக நடந்துகொள்வதற்கு நாம் என்ன செய்யலாம்?

## புண்ணியங்களை அறிவித்தல்

பழைய ஏற்பாட்டுச் சபையோடு ஒப்பிட்டுப் பேசும்போது, இரட்சிப்பையும் தேவனால் அழைக்கப்பட்டு, தெரிந்துகொள்ளப்பட்டிருப்பதையும்மாத்திரம் பேதுரு குறிப்பிடவில்லை. 'எதற்காக அழைக்கப்பட்டோம்? எதற்காகத் தெரிந்து கொள்ளப்பட்டோம்?' என்றும் கேள்வி எழுப்புகிறார். உடனே அதற்கான பதிலையும் கூறுகிறார்.

இந்த விசேஷித்த உறவுக்கு ஒரு குறிப்பிட்ட நோக்கம் உண்டு என்கிறார். கிறிஸ்தவர்கள் 'அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை' அறிவிக்கவேண்டுமாம். 1பேதுரு 2:9. முற்கால இஸ்ரவேலரும் இதையே செய்யவேண்டியிருந்தது. உலகத்திற்கு தம்மைச் சாட்சிப்பகரும்படி தேவன் அவர்களை அழைத்தார். தம்முடைய உடன்படிக்கை மக்களான முற்கால இஸ்ரவேலர் மூலம் உலகம் முழுவதையும் ஆசீர்வதிப்பதே தேவனுடைய நோக்கமாக இருந்தது.

***உபா 4:6; 26:18,19; ஏசா 60:1-3; சக 8:23 ஆகிய வசனங்கள் வலியுறுத்தும் ஒரு முக்கியக் கருத்து என்ன?***

ஆண்டவர் அருளும் இரட்சிப்பைக் குறித்த நற்செய்தியை உலகத்திற்குள் சென்று அறிவிக்கும் ஓர் ஊழியப்பணியை உடன்படிக்கை மக்களாகிய முற்கால இஸ்ரவேலர்கள் பெற்றிருந்தார்கள். அதே ஊழியப்பணியை கிறிஸ்தவர்களும் பெற்றிருக்கிறார்கள். தேவனைப்பற்றி தாங்கள் அறிந்திருப்பதையும், அவரோடுள்ள தங்கள் அனுபவத்தையும், கிறிஸ்துவின்மூலம் உலகத்திற்கு அவர் செய்திருப்பதையும் மற்றவர்களுக்கு அறிவிக்க அவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

***கிறிஸ்தவர்களின் ஊழியப்பணி, நோக்கம் முழுவதற்கும் 1பேதுரு 2:10 எவ்வாறு மையமாக இருக்கிறது?***

பாவத்திலும் மரணத்திலும் உலகம் மூழ்கியிருக்கிறது. அழிவு நெருங்கிவருகிறது. ஆனால், இந்த அழிவிலிருந்து ஒவ்வொருவரையும் காப்பாற்ற இயேசு தம் உயிரைக் கொடுத்தார். இஸ்ரவேலரைக் குறித்த கனத்திற்குரிய சொற்கள் பொறுப்பிற்குரிய சொற்களாகவும் இருக்கின்றன. தேவமக்கள் என்கிற ஓர் அசாதாரண உயர் அந்தஸ்தை கிறிஸ்தவர்கள் பெற்றிருக்கிறார்கள். அந்த உயர் அந்தஸ்தைப் பெறுவதற்கு மற்றவர்களையும் அழைக்கவேண்டிய பொறுப்பும் அதில் இருக்கிறது. கிறிஸ்தவர்கள் இப்போது தேவனுடைய ஜனங்களாகிவிட்டதாக 1பேதுரு 2:10 கூறுகிறது. முன்பு அவர்கள் அப்படி இருக்கவில்லை; இப் போது இரக்கத்தைப் பெற்று ஒரு பரிசுத்த ஜனமாக மாறியிருக்கிறார்கள். ஓசியா 1,2. பொதுவாக, ஆராதனைக்கென்று தனியாகப் பிரித்தெடுக்கப்படுவதைத்தான் பரிசுத்தம் என்று வேதாகமம் கூறுகிறது. ஆகவே, ஒரு 'பரிசுத்த' ஜாதியாக, கிறிஸ்தவர்கள் உலகத்திடமிருந்து பிரிந்திருக்க வேண்டும்; அவர்கள் வாழ்கிற வாழ்க்கையில் அந்த வித்தியாசம் காணப்படவேண்டும். குளிர்ந்த இரவில், குளிர்காய்வதற்கான நெருப்பைப் போல, கதகதப்புக்குள் மற்றவர்களை இழுக்கிறவர்களாக அவர்கள் இருக்கவேண்டும். தாங்கள் பெற்றிருக்கும் மகத்தான இரட்சிப்பைப்பற்றி மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளும் மிகமேலான ஒரு பொறுப்பு கிறிஸ்தவர்களுக்கு இருக்கிறது.

## மேலும் படிக்க:

'தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றதாக சபை இருக்கிறது. அதன் வெளிப்புற அனுகூலங்களுக்காக அல்ல, உலகத்திலிருந்து அதைப் பிரித்துக்காட்டும் சுத்தமான பக்திக்காகவே தேவன் அதை பெரிதாகப் போற்றுகிறார். அங்கத்தினர்கள் கிறிஸ்துவை அறிவதில் வளருவதைவைத்தும், ஆவிக்குரிய அனுபவத்தில் அவர்கள் வளருவதைவைத்தும் அதை மதிப்பிடுகிறார்.

'பரிசுத்தம்,சுயநலமின்மைஎனும்கனியைதம்முடையதிராட்சத்தோட்டத்திலிருந்து பெறுவதற்கு கிறிஸ்து ஏங்குகிறார். அன்பு, தயவு ஆகிய நியதிகளை எதிர்பார்க்கிறார். கிறிஸ்துவின் பிரதிநிதிகளிடம் வெளிப்படவேண்டிய குண அழகிற்கும் மன அழகிற்கும் கலையின் சகல அழகாலும் ஈடுகொடுக்கமுடியாது. விசுவாசியின் ஆத்துமாவைச் சூழ்ந்திருக்கும் கிருபையும், மனதிலும் இருதயத்திலும் செயல்படும் பரிசுத்த ஆவியானவரின் கிரியையும்தான் ஜீவனுக்கேதுவான ஜீவ வாசனையாக அவனை மாற்றுகிறது; தேவன் அவனுடைய ஊழியத்தை ஆசீர்வதிக்கச் செய்கிறது.' – *EGW, COL, p 298.*

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *அந்தகாரத்திலிருந்து அவருடைய 'ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு' அழைக்கப்படுவது என்றால் என்ன? இயேசுவை நம்பாத ஒருவருக்கு இதை எவ்வாறு எடுத்துச்சொல்வீர்கள்? அந்தகாரம் எது? ஒளி எது? பேதுரு சொல்வதின் பின்னணியில், இரண்டுக்குமுள்ள வித்தியாசம் என்ன?*

2. *'நீங்கள் சுதந்தரித்துக்கொள்ளும்படி பிரேவசிக்கும் தேசத்தில் நீங்கள் கைக்கொள்ளும் பொருட்டு, என் தேவனாகிய கர்த்தர் எனக்குக் கற்பித்தபடியே, நான் உங்களுக்குக் கட்டளைகளையும் நியாயங்களையும் போதித்தேன். ஆகையால் அவைகளைக் கைக்கொண்டு நடவுங்கள்; ஜனங்களின் கண்களுக்கு முன்பாகவும் இதுவே உங்களுக்கு ஞானமும் விவேகமுமாய் இருக்கும்; அவர்கள் இந்தக் கட்டளைகளையெல்லாம் கேட்டு, இந்தப் பெரிய ஜாதியே ஞானமும் விவேகமுள்ள ஜனங்கள் என்பார்கள் நம்முடைய தேவனாகிய கர்த்தரை நாம் தொழுதுகொள்ளுகிறபோதெல்லாம், அவர் நமக்குச் சமீபமாயிருக்கிறதுபோல, தேவனை இவ்வளவு சமீபமாய்ப் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது? இந்நாளில் நான் உங்களுக்கு விதிக்கிற இந்த நியாயப்பிரமாணம் முழுமைக்கும் ஒத்த இவ்வளவு நீதியுள்ள கட்டளைகளையும் நியாயங்களையும் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதியும் எது? உபா 4:5-8. இந்த வார்த்தைகள் எவ்விதங்களில் எல்லாம் செவந்த்-டே அட்வென்ட்டிஸ்டுகளுக்குப் பொருந்தும்?*

3. *'கர்த்தர் தயையுள்ளவரென்பதை நீங்கள் ருசிபார்த்ததுண்டானால்' என்று 1பேதுரு 2:3 சொல்கிறது. அவர் தயவை எவ்வாறு 'ருசித்திருக்கிறீர்கள்?*

4. செவந்த்-டே அட்வென்ட்டிஸ்டுகள்பற்றி தெரியாதவர்கள், உங்கள் சபையிலும் உங்களிலும் எதைக் கண்டு ஈர்க்கப்படக்கூடும்?

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்

## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

## ஓய்வுநாட்பள்ளிப் பாடங்கள்

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Mogappair SDA Tamil Sabbath School Lesson

என்று டைப் பண்ணினால் பாடங்கள் வரும்.
அந்த வாரத்துக்குரிய பாட எண்ணைத் தேடிப்பார்த்துக் கேட்கவும்.